**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 25.11.2025

அசல் வழக்கு எண். 220/2015

வா.சா. 2 – ஜெயமணி த/பெ. உஞ்சி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் ஆட்டோ ஓட்டி வருகிறேன். என்ன படித்துள்ளீர்கள் என்றால் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி எப்படி தெரியும் என்றால் எங்கள் ஊர்க்காரர். வாதி வீட்டுக்கும் உங்கள் வீட்டுக்கும் எவ்வளவு தூரம் என்றால் நான்கு வீடு தள்ளி உள்ளது. வாதி சோழன் என்ன வேலை செய்கிறார் என்றால் மேஸ்திரி வேலை சென்ட்ரிங் வேலை செய்கிறார். பிரதிவாதி சேகர் உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் மாமா மகன் ஆவார். வாதி சோழன் உங்களுக்கு உறவுக்காரரா என்றால் உறவுகாரர் இல்லை. சோழன் என்பவர் சென்ட்ரிங் வேலை தவிர வேறு என்ன வேலை செய்கிறார் என்றால் வேறு வேலை கிடையாது. சேகர் என்பவருக்கு பணம் தேவை என்று உங்களிடம் சொன்னாரா என்றால் சொன்னார். சேகர் என்பவருக்கு நீங்கள்தான் பணம் வாங்கி கொடுக்க உதவினீர்கள் என்றால் சரிதான். எவ்வளவு பணம் வாங்கி கொடுத்தீர்கள் என்றால் ரூபாய் 2 லட்சம் வாங்கிக் கொடுத்தேன். எந்த தேதியில் வாங்கி கொடுத்தீர்கள் என்றால் 10.12.2012ல் வாங்கி கொடுத்தேன். அன்று என்ன கிழமை என்று ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. எப்பொழுது பணம் கொடுத்தார் என்றால் காலை சுமார் 10 மணி அளவில் கொடுத்தார். யார் பணம் நேரடியாக கொடுத்தது என்றால் சோழன் என்பவர்தான் நேரடியாக கொடுத்தார். நீங்கள் பணம் வாங்கி கொடுத்தீர்களா என்றால் நான் வாங்கி கொடுக்கவில்லை அவர்களாகவே நேரடியாக

கொடுத்துக் கொண்டார்கள் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். பாண்டு பணம் வாங்கிய பிறகு எழுதி கொடுக்கப்பட்டது. பாண்டு பணம் வாங்கிய இடத்திலேயே எழுதி கொடுத்தார். பாண்டு பத்திரத்தில் எவ்வளவு வட்டி கொடுப்பதாக எழுதி கொடுத்தார் என்றால் 2 ரூபாய் வட்டி கொடுப்பதாக எழுதி கொடுத்தார். பணத்தை எவ்வளவு நாளில் திருப்பி கொடுப்பதாக சொன்னார் என்றால் ஒரு வருடத்திற்குள் திருப்பி கொடுப்பதாக சொன்னார். என்ன மொழியில் கையொப்பம் போட்டார் என்றால் ஆங்கிலத்தில் போட்டார். வாதி வெளியில் இருந்து எழுதிக் கொண்டு வந்து பாண்டு கொடுத்ததாகவும் கூறுகிறார் நீங்கள் அங்கேயே எழுதிக் கொடுத்ததாக கூறுகிறீர்கள் எது உண்மை என்றால் அங்கே எழுதி கொடுத்தது தான் உண்மை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் தகராறு நடந்ததா என்றால் இல்லை. வாங்கிய பணத்தை திரும்பி வாங்கி கொடுத்து விட்டீர்களா என்றால் இதுவரை கொடுக்கவில்லை. வட்டி ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. பிரதிவாதி பணம் வாங்கவில்லை என்றால் சரியில்லை. வட்டிக்கு ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியில்லை. சீட்டு கட்டி பணம் கட்டாததால் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட சண்டையினால் இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியில்லை. வாதி பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் பொய் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. அவர் உங்கள் நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal

Additional Subordinate Judge,
Kancheepuram